**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டக் கூறு 1 - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டக் கூறு 1 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்ப மற்றும் இரண்டாம் தர கல்வியின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், நிகழ்ச்சித்திட்ட செயற்பாடு மற்றும் தொழில்நுட்ப உதவி எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 449,645 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,900 மில்லியன் தொகையாக உள்ளதுடன் அதில் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 434,140 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுதுறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி மற்றும் செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டின் 5.1 ஆம் பிரிவு | குறைந்தபட்சம் 02 மாதங்களுக்கு ஒரு முறை செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் நடாத்தப்படுவதை வரிசை அமைச்சின் செயலாளர்/ மாகாண சபையின் பிரதம செயலாளர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக ஒரே ஒரு வழிநடாத்தல் குழுக் கூட்டமே நடாத்தப்பட்டிருந்தது. | நாட்டின் நிலைமைக்கு ஏற்ப வழிநடாத்தல் குழுக் கூட்டங்களை நடாத்த முடியவில்லை. | செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 96 ஆம் பந்தி | 2022 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் முன்வைக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுத் திட்டம் பொதுவாக வெளிநாட்டு உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பொதுக் கல்வியின் ஒருங்கிணைப்பு, ஒழுங்குமுறை மற்றும் மதிப்பீடு என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை அல்லது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 சனவரி மாத கணக்காய்வுத் திட்டத்தில், கல்வி அமைச்சில் அமுல்ப்படுத்தப்பட்ட வெளிநாட்டு செயற்திட்டத்தின் பரீட்சிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. | உளளகக் கணக்காய்வை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 இணக்கம் செய்யப்படாத மீதி

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான கூறு 01 இன் மொத்தச் செலவினம் ரூபா 291 மில்லியனாகவும் கூறு II இன் செலவினம் ரூபா 38 மில்லியனாகவும் இருந்தால், 2022 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் கீழ் ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 329 | நிதிக்கூற்றுக்கள் உண்மையான செலவினங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றதுடன் நிதி முன்னேற்ற அறிக்கைகள் கிளைகளின் தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. | செயற்திட்டத்தின் சரியான செலவினத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| மில்லியனாக அறிக்கையிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மொத்த நிதி முன்னேற்றம் ரூபா 202 மில்லியனாக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கையில் பதிவு செய்யப்பட்ட செலவினத்திற்கு இடையே வேறுபாடு இருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் உண்மையான கிரயத்தின் அடிப்படையில் முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்படும். | வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | | | | |
| (அ) | பாடசாலை மானியம் | 178 | 65 | 2021 மார்ச் 23 ஆம் திகதிய 05/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 178 பாடசாலைகளுக்கு இரண்டு கட்டங்களில் ரூபா 177.5 மில்லியன் மானியம் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிதியேற்பாடுகளின் பயன்பாடு தொடர்பான நிதி முன்னேற்றம் 2021 ஏப்ரல் 30 அளவில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 65 பாடசாலைகள் மாத்திரமே நிதி முன்னேற்றத்தைச் சமர்ப்பித்துள்ளன. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட மொத்த மானியத்தில், மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 39 மில்லியனாக இருந்ததுடன் இது மொத்த மானியத்தில் 22 சதவீதம் மாத்திரமே ஆகும். | கடந்த ஆண்டில் உள்ளூர் பொருளாதாரத்தில் நிலவிய விலையேற்றம் மற்றும் சில பொருட்களின் பற்றாக்குறை. | கடந்த ஆண்டின் போது உள்ளூர் பொருளாதாரத்தில் நிலவிய விலையேற்றம் மற்றும் சில பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக பட்டியலிடப்பட்ட திகதிக்குள் உரிய செயற்திட்டங்களை பூர்த்திசெய்ய முடியாமல் போனதன் விளைவாக சில பாடசாலைகள் தொடர்புடைய முன்னேற்றங்கள் உள்ளடங்கிய அறிக்கைகளை தற்போது வழங்குகின்றமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியும் என்பதால் பதிவுகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | பாடசாலை மானியம் | 174 | 0 | முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட மானியங்கள் தொடர்பான இறுதி | உள்ளூர் பொருளாதாரத்தின் வீழ்ச்சி மற்றும் உள்ளூர் மற்றும் | திறைசேரி செயற்பாடுகள் மூலம் கட்டுநிதி பெறப்படாததன் விளைவாக, | விநியோக இணைப்பு குறிகாட்டிகளைப் பூர்த்தி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | அறிக்கைகள் அல்லது நிதி முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 102.7 மில்லியன் மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2022 இல் வழங்கப்பட்ட மானியங்கள், ஆண்டின் கடைசி மாதத்தில் நிதியை விடுவித்ததால், 2023 ஆகஸ்ட் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு நாணயங்களில் நிதி பற்றாக்குறை. | பட்டியலிடப்பட்ட திகதிக்குள் இந்த மானியத் தொகையை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு விடுவிக்க முடியவில்லை. | செய்வதற்கு ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பாடசாலை மானியம் | 270 | 09 | 2021 திசெம்பர் 10 ஆம் திகதிய 25/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 வரை உயர்த்தும் செயற்திட்டத்துடன் தொடர்புடைய 270 பாடசாலைகளுக்கு ரூபா 285.7 மில்லியன் மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2022 திசெம்பர் 31 அளவில் மானியங்கள் பயன்படுத்தப்பட்டு நிறைவடைந்திருக்க வேண்டும். 09 பாடசாலைகள் மாத்திரமே நிதி முன்னேற்றத்தை வழங்கியிருந்ததுடன் அந்த மானியங்களின் பயன்பாடு குறித்து கல்வி அமைச்சு பின்தொடர் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | உலகளாவிய தொற்றுநோய், ஊழியர்களின் திறன் மட்டுப்பாடு, ஆசிரியர்களின் வேலை நிறுத்தங்கள், பாடசாலைகளை அடிக்கடி தற்காலிகமாக மூடுதல், விலை உயர்வு மற்றும் சந்தையில் சில பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக சுற்றறிக்கைகள் மற்றும் விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்கி பின்பற்றப்படுகிறது. | சில பாடசாலைகளுக்கு நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து உப திட்டத்துக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் தாமதமாகி வருகின்றமையை இனங்காண முடிந்துள்ளதுடன் முன்னேற்றத்தை குறிப்பிடுவதும் தாமதமாகி வருகின்றமை அவதானிக்கப்படுகிறது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக வழங்கப்பட்ட நிதிகளின் பயன்பாடு தொடர்பான பதிவுகள் பேணப்பட வேண்டும். |
| (ஈ) | கணிதம் மற்றும் ஆங்கிலக் கற்றல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம். | 60% | இன்னும் கணக்கிடப்படவில்லை | 9 மாகாணங்களில் உள்ள 500 பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான எதிர்பார்த்த முன்னேற்றம் 60 சதவீதமாக இருந்த போதிலும் | பாடசாலைக் கல்விக் காலப்பகுதி நீடிப்பு | கல்வி அமைச்சுக்கு 2023.05.17 இல் பொது மதிப்பீட்டுப் பரீட்சையின் அச்சிடப்பட்ட வினாத்தாள்கள் கிடைத்துள்ளதுடன், மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு குறித்த வினாத்தாள்களின் விநியோகம் ஏற்கனவே | குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பாடசாலைக் கல்விக் காலப்பகுதி 2023 மார்ச் வரை நீடிக்கப்பட்டதன் காரணமாக செயன்முன்னேற்றத்தின் முன்னேற்ற அளவீடு தாமதமாகியதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்ற மதிப்பீடு கணக்காய்வு திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சைகளை 2023.06.30 இற்கு முன்னர் மாகாண மட்டத்தில் நடாத்துவதற்கும், மதிப்பெண்கள் பற்றிய அனைத்து பகுப்பாய்வுகளையும் கல்வி அமைச்சுக்கு வழங்குவதற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | தேசிய கல்வி நிறுவகத்தின் செயற்பாடுகள் | 11 | 0 | செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 11 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சீர்திருத்த முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன. | 2023.03.13 ஆம் திகதிய சனாதிபதி செயலகத்திடம் இருந்து பெறப்பட்ட கடிதத்தின் பிரகாரம் சீர்திருத்த அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக முன்மொழிவுகளை சமர்ப்பித்தலானது கௌரவ சனாதிபதி தேசிய கல்விக் கொள்கைக்கான உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை அளிக்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே பாடத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் தரம் 1 முதல் தரம் 10 வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | அமைச்சின் செயன்முன்னேற்றம் | 32 | 0 | 2022 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்ட பணிகளில், 07 கிளைகளைச் சேர்ந்த 32 பணிகள் எந்த முன்னேற்றத்தையும் அடைந்திருக்காததுடன் 06 கிளைகளைச் சேர்ந்த 13 பணிகளின் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. | நாட்டில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏற்பட்டுள்ள பொருளாதார, சமூக மற்றும் சுகாதார சிக்கல் நிலைமை | மீளாய்வாண்டின் போது ஒரு நாடாக இலங்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் பொருளாதார, சமூக மற்றும் சுகாதார பிரச்சனை நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அந்த சூழ்நிலையில் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெரும்பாலான நிகழ்ச்சித்திட்டங்கள் ஒன்லைனில் நடாத்தப்பட்டதுடன் அங்கே நிதி முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் செயற்பாட்டுக் கையேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் கணிதக் கற்றலை மேம்படுத்துதல், ஆங்கில மொழிக் கற்றலை மேம்படுத்துதல், டிஜிட்டல் கற்றலை ஊக்குவித்தல், கல்வித் தலைமைத்துவ முகாமைத்துவம் மற்றும் குடியுரிமைக் கல்வி ஆகிய பகுதிகளில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும், கணிதம் மற்றும் ஆங்கிலக் கற்றலை ஊக்குவிப்பதற்காக ரூபா 16 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. அதேநேரம் மேற்கூறிய பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டிகளுடன் நேரடியாகச் சீரமைக்கப்படாத நடவடிக்கைகளுக்காக ரூபா 85 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. | கூறு 1 இன் செலவினங்களின் பகுப்பாய்வின் பிரகாரம் செயற்திட்ட நிதிகள் பெரும்பாலும் செயற்திட்டத்தின் நோக்லெல்லையினுள் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பது தெளிவாகிறது. திரண்ட நிதிகள் கிடைக்காததால், இரண்டாந்தர கல்வியின் ஏனைய செயற்பாடுகளுக்காக GEMP நிதிகள் பயன்படுத்தப்பட்டன. | செயற்திட்டத்தின் நோக்கெல்லையினுள் நிதிகளை செயற்திறனாக பயன்படுத்துவதில் போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பொதுநலவாய நிதியத்தின் கீழ் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்த்திட்டத்திற்காக நிதி பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 4.6 மில்லியன் மாற்றப்பட்டிருந்த போதிலும் இச் செயற்திட்டத்தின் மூலம் நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்புடைய செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் மேற்கொள்ளப்பட்ட இச் செலவினம் செயற்திட்டத்தின் நோக்கெல்லைக்கு அப்பால் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் நோக்கெல்லையினுள் நிதிகளை செயற்திறனாக பயன்படுத்துவதில் போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சு வளாகத்தில் 25 தொடக்கம் 320 ஆசனங்களைக் கொண்ட 06 விரிவுரை மண்டபங்கள் மற்றும் குழு கூட்ட மண்டபங்கள் காணப்பட்ட போதிலும் செயற்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக அமைச்சுக்கு வெளியே உள்ள வெளியக விரிவுரை மண்டபங்களைப் பயன்படுத்துவதற்காக ரூபா 2.5 மில்லியன் தொகை மண்டபக் கட்டணங்களாக செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சு வளாகத்திற்கு வெளியே நிகழ்ச்சிகளை நடாத்துவதன் நோக்கம், ஒதுக்கப்பட்ட வேலையில் வளவாளர்களின் முழுநேர பங்களிப்பையும் கவனத்தையும் உறுதி செய்வதற்காகும். | அமைச்சின் வளங்களைப் பயன்படுத்தி கிரயத்தைக் குறைப்பதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். |